மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கேள்விதான். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கட்டப்பட்டு ஆனால் முடிவுறாமல் இருக்கிறது. அது 5,6 ஆண்டுகளுக்கு முன்பு என்பது குறித்து தகவல் என்னிடத்திலே இல்லை. குறிப்பிட்டு அதை எழுதினால் உரிய நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும்.

மருங்காபுரி ஒன்றியத்தில் ஆதி திராவிடர் குடியிருப்புகள்

*2275 பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சி மாவட்டம், மருங்காபுரி ஒன்றியத்தில் ஆதி திராவிடர் குடியிருப்புகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

9.35 மணி

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989–90 ஆம் ஆண்டில் 110 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 15 பஞ்சாயத்து யூனியன்கள் உள்ள ஒன்றியங்களும் இருக்கின்றன. 50—க்கும் மேற்பட்ட பஞ்சாயத்துக்களைப் பெற்ற ஒன்றியங்களும் இருக்கின்றன. ஆனால் தொகுப்பு வீடுகள் ஒதுக்கப்படுகின்றபோது எல்லா ஒன்றியங்களுக்கும் ஒரே நிலையிலே, ஒரே எண்ணிக்கையிலே ஒதுக்கப்படுகின்றன மத்திய அரசிடமிருந்து வருகின்ற பணம் உட்பட்டது. மற்ற செயல்களுக்கு தொகை ஒதுக்குகின்ற போது மக்கள் தொகை அடிப்படையிலே ஒதுக்குவது போல இதற்கும் மக்கள்தொகை அடிப்படையிலே, வீடுகளில் எண்ணிக்கை ஒதுக்கப்படுமா, அதற்கான செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசுக்கும் இதில் பங்குண்டு. 20 சதவீத பங்கு மாநில அரசு தருகிறது. கூரைக்கென தனியாக 4 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, அளிக்கப்பட்டு வருகிறது. மீண்டும் அப்படிப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை தேவை என்று கருதினால், அப்படிப்பட்ட தேவையான இடங்களுக்கு அரசு முடிவெடுத்து அறிவிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேராசிரியர் க. பொன்னுசாமி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டிமுடிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு மின்னிணைப்புத் தருவதிலே காலதாமதம் ஏற்படுவதற்கு அமைச்சர் அவர்கள்

1990 ஏப்ரல் 18]

சில காரணங்களைச் சொன்னார்கள். ஆனாலும், மிக அருகாமையிலே மின் கம்பங்கள் இருந்தும் இன்னும் மின்னிணைப்பு தரப்படாத குடியிருப்புகள் அங்கே இருக்கின்றன. இவற்றை உடனடியாகப் பரிசீலித்து அரசு அவர்களுக்கு மின்னிணைப்பு தர முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்டு எழுதி அனுப்பினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்ட வேலைகள்.

*4378 திரு. ப. முத்துசாமி :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்ட வேலைகளை தேர்வு செய்ய என்ன விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1989-90-ம் ஆண்டு முதல் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டமும், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டமும் ஒருங்கிணைக்கப்பட்டு ''ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம்'' என்கிற திட்டமாகச் செயல்பட்டு வருகிறது. இத் திட்டம் மத்திய அரசு வகுத்துள்ள வழிமுறைகளுக்கிணங்க செயல் படுத்தப்பட்டு வருகிறது.

திரு. ப. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம், இப்போது ஆட்சி மாற்றத்தின் காரணமாக, வேறு வழிமுறைகள் பின்பற்றப்படுமா? எந்தெந்த வகையில் இந்த வேலைகள் தேர்வு செய்யப்படும்? இந்த வேலைகளை செய்து முடிப்பது ஊராட்சி மன்றமா அல்லது அதற்கு டெண்டர் விடுகின்ற முறை பின்பற்றபடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு முதல் நடத்தப்படுகின்ற இந்தப் புதிய திட்டம் மைய அரசின் 80 விழுக்காடு நிதியுடனும் மாநில அரசின் 20 விழுக்காடு நிதியுடனும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அத்தோடு 6 விழுக்காடு நிதியை மாவட்ட அளவில் நிறுத்திக் கொண்ட பின், அதாவது குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கென ஒதுக்கப்பட்டதற்குப்பின், 80 விழுக்காடு மக்கள் தொகை அடிப் படையில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படும். இத்திட்டத்